# கர்த்தருக்கு நான் என்னத்தைச் செலுத்துவேன்?

*நவம்பர் மாதத்தில் அமெரிக்காவில் நன்றி செலுத்துவதற்கென்று ஒரு விசேஷ நாள் கொண்டாடப்படுகின்றது. நன்றி செலுத்துதல் - விசேஷமாய், கர்த்தருக்கு நன்றி செலுத்துதல் - பற்றிய பிரசங்கங்கள் எப்பொழுதுமே ஏற்புடையவைகளாய் இருக்கின்றன.*

ஆஸ்திரேலியாவின் சிட்னியில் புறநகர்ப் பகுதியில் துறைமுகத்திற்கு அண்மையில் உயர்ந்த கட்டிடங்கள் ஆழ்ந்துள்ள பகுதியில், மனதில் பதியக் கூடிய வகையிலான நினைவுக் கொண்டாட்டமானது பிரிட்டிஷில் இருந்து அங்கு குடியேறிவர்கள் நடத்திய மதரீதியான முதல் ஆராதனையின் நினைவாக நடைபெற்றது.

பின்வரும் காட்சியை உங்கள் மனதில் சித்தரியுங்கள்: குடியேறுபவர் களைத் தாங்கிச் சென்ற - இவர்களில் பெரும்பாலோர் முன்னாள் குற்றவாளி களும் அடிமைகளுமாயிருந்தனர் - முதல் படகானது இப்பொழுது சிட்னி என்றழைக்கப்படும் துறைமுகத்தில் ஜனவரி 26, 1788 அன்று சென்றடைந் தது. செப்பமற்ற வகையிலான குடியிருப்புப் பகுதியொன்று அமைக்கப் பட்டது. பெப்ருவரி 3ம் நாளன்று அவர்கள் உள்நாட்டிற்குள் சென்று தங்கும் இடம் ஒன்றை அவசரமாய் எழுப்பினர். அந்தப் பயணத்தில் பலர் இறந்து போயினர்; உயிருடன் இருந்தவர்கள் சிறிதே உடமை உள்ளவர்களாக அல்லது உடமையற்றவர்களாக இருந்தனர். அவர்களைப் பற்றிய எல்லாம் காடாக, குழப்பமுற்ற, காட்டுத்தனமான மக்கள் குடியிருக்கும் இடமாயிருந்தது.

நியமிக்கப்பட்ட வேளையில், மதகுருவான ரிச்சர்டு ஜான்ஸன் பேசுவதற்கு எழுந்து நின்றார். அந்த வேளையில் எது ஏற்புடைய வசனப் பகுதியாய் இருந்திருக்கும்? யோபு 5:7ஐப் பற்றி என்ன? “அக்கினிப் பொறிகள் மேலே பறக்கிறது போல, மனுஷன் வருத்தம் அநுபவிக்கப் பிறந்திருக்கிறான்.” சங். 13:1 ஏற்புடையதாகக் காணப்படுகின்றது: “கர்த்தாவே, எதுவரைக்கும் என்னை மறந்திருப்பீர், எது வரைக்கும் உம்முடைய முகத்தை மறைப்பீர்?” திரு. ஜான்ஸன் இப்படிப்பட்ட வசனப் பகுதி எதையும் தேர்ந்தெடுக்கவில்லை. மாறாக, சங். 116:12 அவருடைய வசனப் பகுதியாக இருந்தது: ‘‘கர்த்தர் எனக்குச் செய்த எல்லா உபகாரங் களுக்காகவும், அவருக்கு என்னத்தைச் செலுத்துவேன்.’’ இந்த மக்கள் கொஞ்சமே கொண்டிருந்தனர்; ஆனால் அவர்கள் உயிருடனும், சுதந்திர மாகவும் இருந்தார்கள், மற்றும் எதிர்கால வாக்குறுதியை வைத்திருந்தது. அவர்கள்

*தாங்கள் கொண்டிருந்தவைகளுக்காக நன்றி நிறைந்தவர்களாய் இருந்தனர்.*

*நீண்ட நாட்களுக்கு முன்பு கூடிய அந்தக் கூட்டத்திலிருந்து உங்கள் பார்வையை இன்றைய நாட்களின் ஆராதனை ஒன்றுக்குத் திருப்புங்கள். நண்பர்கள், அன்புக்குரியவர்கள், கிறிஸ்துவுக்குள்ளான சகோதரர்கள் மற்றும் சகோதரிகளின் மத்தியில் நாம் இருக்கின்றோம். நாம் அடிமைகளாய் அல்ல ஆனால் சுயாதீனமுள்ள மனிதர்களாய் இருக்கின்றோம்; நம்மில் பெரும்பாலோர், அரசியல் ரீதியாகச் சுதந்திரமானவர்களாய் இருக்கின் றோம், ஆனால் கிறிஸ்தவர்களாகிய நாம் ஆவிக்குரிய வகையில் சுதந்திர மானவர்களாய் இருக்கின்றோம். நாம் கர்த்தரால் ஏராளமாய் ஆசீர்வதிக்கப் பட்டுள்ளோம். எனவே நாம், "கர்த்தர் [நமக்குச்] செய்த எல்லா உபகாரங் களுக்காகவும், அவருக்கு என்னத்தைச் செலுத்து[வோம்]?'' என்று கேட்பதினால் இருமடங்கு தகுதியானவர்களாகின்றோம்.*

## நமக்காக அவருடைய எல்லா உபகாரங்களும்

*''கர்த்தர் நமக்குச் செய்த உபகாரங்களை'' கவனிப்பதில் நாம் தொடங்குவோம். நமது ஆசீர்வாதங்களை அவ்வப்போது எண்ணுவது தேவை.*

### அவருடைய ஆவிக்குரிய உபகாரங்கள்

*முதலாவதும் முன்னதானதுமானது அவருடைய ஆவிக்குரிய உபகாரங் களாகும். "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம்; அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்'' (எபே. 1:3).*

*ஆவிக்குரிய மாபெரும் அன்பளிப்பு என்பது அவருடைய குமாரன் என்ற கொடையாக உள்ளது. "தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" (யோவா. 3:16). எனக்கு மூன்று மகள்கள் இருக்கின்றார் கள். ஆனால் அவர்களில் ஒருத்தியைக் கூட மனித குலத்திற்குக் கொடுக்க நான் விரும்ப மாட்டேன். ஆனால் தேவன் ஒரே ஒரு மகனைக் கொண்டிருந்தார், மற்றும் அவரை நமக்காக அவர் தந்தருளினார். "தேவன் அருளிய சொல்லி முடியாத ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம்" (2 கொரி. 9:15).*

*வேதாகமம் என்பது இன்னொரு மாபெரும் கொடையாக உள்ளது. வேதாகமம் தேவனுடைய நிறைவான, இறுதியான வெளிப்பாடாக உள்ளது. ''... ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினது ...'' (2 பேது. 1:3). எந்த நற்செயலையும் செய்யும் அறைகூவலைச் சந்திக்க வேதாகமம் நம்மை ஆயத்தப்படுத்துகின்றது (2 தீமோ. 3:17). நாம் ஆராதிக்கின்றவர் களாய் இருக்கின்றோம், மற்றும் வேதாகமம் நமக்கு ஆராதிப்பது எவ்வாறு என்று போதிக்கின்றது (யோவா. 4:24). நாம் பாவம் நிறைந்த தனிநபர்களாய் இருக்கின்றோம், மற்றும் நாம் எவ்விதம் இரட்சிக்கப்பட முடியும் என்பதை வேதாகமம் நமக்குக் கூறுகின்றது*

*(மாற். 16:15, 16). நாம் துன்புறும் படைப்புயிர்களாய் இருக்கின்றோம், மற்றும் வேதாகமம் மாபெரும் வைத்தியரை வெளிப்படுத்துகின்றது (மத். 9:12). நாம் ஊக்கமிழந்து போகும் பொழுது, வேதாகமம் தைரியத்தின் செய்தியொன்றை முன் வைக்கின்றது. நாம் பலவீனமாய் இருக்கின்ற பொழுது, அது பலத்தை அளிக்கின்றது. நாம் மகிழ்ச்சியாய் இருக்கின்ற பொழுது, அது நமது சந்தோஷத்தைக் கூடுதலாக்குகின்றது. நாம் நம்பிக்கையிழந்து இருக்கின்ற பொழுது, அது நமக்கு நம்பிக்கையளிக்கின்றது. நாம் மரிக்கின்ற பொழுது, அது தேவனுடைய கிருபையால் (நித்திய) வாழ்வை நமக்கு வாக்குத்தத்தம் செய்கின்றது.*

*நம்மை அதிகமாய்ச் சூழ்ந்து நிற்கும் இரட்சிப்பின் கொடையும் உள்ளது. "பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன்" (ரோமர் 6:23).*

*சபையின் கொடையானது இரட்சிப்பின் கொடையோடு உறவு படுத்தப்பட்டுள்ளது: சபை என்பது பரலோகத்தினால் அனுப்பப்பட்டதாக (எபே. 3:10, 11), இரத்தத்தால் வாங்கப்பட்டதாக (அப். 20:28), ஆவியினால் நிறைந்ததாக (எபே. 2:22), மற்றும் மகிமையினால் எல்லைப்படுத்தப் பட்டதாக (1 கொரி. 15:23-26) உள்ளது. சபை என்பது தேவனை நம்முடைய தந்தையாகக் கொண்ட ஆவிக்குரிய குடும்பமாக உள்ளது (1 தீமோ. 3:15). இது கிறிஸ்து இராஜாவாக ஆளுகை செய்கின்ற ஒரு இராஜ்யமாக உள்ளது (மத். 16:18, 19). இது நாம் வேலை செய்கின்ற திராட்சத் தோட்டமாக உள்ளது (மத். 20:1). இது கர்த்தருக்காக நாம் யுத்தம் செய்கின்ற சேனையாக உள்ளது (1 தீமோ. 6:12). இது தேவனை நாம் ஆராதிக்கின்ற அவருடைய ஆலயமாக உள்ளது (எபே. 2:21). இது "பாதுகாப்பின் பேழையாக"[1] மற்றும் "அடைக்கல நகராக"[2] உள்ளது இங்கு நாம் பாதுகாப்பையும் இரட்சிப்பை யும் கண்டடைய முடியும். (எபே. 2:16; அப். 20:28ஐக் காணவும்.)*

*இவை எல்லாவற்றுடனும் நாம் "அவருடைய மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்கள்" என்ற (2 பேது. 1:4) கொடையையும் கூட்டிக் கொள்ள முடியும். வேதாகமத்தில் உங்களுக்கு மிகவும் பிரியமான வாக்குத்தத்தம் எது? எனக்குப் பிரியமான சில வாக்குத்தத்தங்கள் பின்வருமாறு:*

> *அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர் களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம் (ரோமர் 8:28).*

> *நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத் தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக் குள்ளாகக் காத்துக்கொள்ளும் (பிலி. 4:6, 7).*

> *… நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கை விடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே. அதினாலே நாம்*

*தைரியங்கொண்டு, கர்த்தர் எனக்குச் சகாயர், நான் பயப்படேன், மனுஷன் எனக்கு என்னசெய்வான் என்று சொல்லலாமே (எபி. 13:5, 6).*

*அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள் (1 பேது. 5:7).*

*அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்; அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும் (1 யோவா. 1:7).*

*நிறைவாக, நாம் பரலோகத்தின் கொடையை எதிர்பார்த்துக் கண்ணோக்குகின்றோம். அற்புதமான அந்த இடத்தில் தேவன், "[நம்முடைய] கண்ணீர்கள் யாவையும் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை; [ஏனெனில்] முந்தினவைகள் ஒழிந்து போயின" (வெளி. 21:4)!*

## *அவருடைய சரீரப் பிரகாரமான உபகாரங்கள்*

*தேவனுடைய ஆவிக்குரிய அளிப்புகள் அற்புதமானவைகளாய் உள்ளன. இருப்பினும், நமக்கு அவருடைய சரீரப்பிரகாரமான உபகாரங்கள் புறக்கணிக்கப்படக் கூடாதவையாக உள்ளன.*

*அவர் நமக்குக் குடும்பங்களைக் கொடுத்துள்ளார்: நமது துணையாளர்கள் மற்றும் நமது பிள்ளைகள். "குணசாலியான ஸ்திரீயைக் கண்டு பிடிப்பவன் யார்? அவளுடைய விலை முத்துக்களைப் பார்க்கிலும் உயர்ந்தது" (நீதி. 31:10). "… புத்தியுள்ள மனைவியோ கர்த்தர் அருளும் ஈவு" (நீதி. 19:14). "இதோ, பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம், கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன்'' (சங். 127:3). கிறிஸ்தவக் குடும்பம் என்பது ஒரு மலராகவும், பரலோகம் என்பது அதன் கனியாகவும் உள்ளது என்று யாரோ ஒருவர் கூறினார்.*

*தேவன் நமக்கு வாழ்க்கைத் தேவைகளைக் கொடுக்கிறார்: மலைப் பிரசங்கத்தில் இயேசு, நமக்கு "வேண்டிய ஆகாரத்தை" தேவன் நமக்குத் தருகிறார் என்று வலியுறுத்தினார் (மத். 6:11). அவர் ''வானத்துப் பறவைகளுக்கும்" நமக்கும் (தேவையானவற்றை) அளிக்கிறார் (மத். 6:26). நாம் "முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடினால்" வாழ்வின் தேவைகள் யாவும் நமதாகும் (மத். 6:33) என்று இயேசு வாக்களித்தார்.[3]*

*மற்றும், தேவன் நமக்கு உடல்களையும் ஆரோக்கியத்தையும் கொடுத்துள்ளார். தாவீது கூறியபடி, நாம், "பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டுள்ளோம்" (சங். 139:14).*

*சமாதானம் மற்றும் சுதந்திரம் ஆகியவற்றிற்கான தேவனுடைய அளிப்பு உள்ளது. 1 தீமோ. 2:1, 2ல் நமக்கு, ஜெபங்கள் "எல்லா மனுஷருக்காகவும் … நாம் எல்லாப் பக்தியோடும் நல்லொழுக்கத்தோடும் கலகமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம் பண்ணும்படிக்கு, ராஜாக்களுக்*

*காகவும், அதிகாரமுள்ள யாவருக்காகவும் ...” ஏறெடுக்கப்பட வேண்டும் என்று கூறப்படுகின்றது. உலகின் பல பகுதிகளில் கிறிஸ்தவர்கள் அரசியல் ரீதியாக அற்புதமான ஆசீர்வாதங்களை மகிழ்வுடன் அனுபவிக்கின்றனர், மற்றும் இவ்விதமாக அவர்களால் ஒவ்வொரு வாரத்திலும் தேவனை ஆராதிக்க வர முடிகின்றது.*

*தேவன் அளித்துள்ள அளிப்பாகிய அழகை மறக்க விரும்ப மாட்டோம். நாம் அழகினால் சூழப்பட்டுள்ளோம்: சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள்; பருவ காலங்களின் அற்புதங்கள்; மரங்கள் மற்றும் மலர்கள்; பறவைகள் மற்றும் விலங்குகள். பவுல், “... வானத்தையும், பூமியையும், சமுத்திரத்தையும், அவைகளிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின ஜீவனுள்ள தேவன் ... நன்மை செய்து வந்து, வானத்திலிருந்து மழை களையும், செழிப்புள்ள காலங்களையும் நமக்குத் தந்து ...” (அப். 14:15-17) என்று குறிப்பிட்டார்.*

## எனவே கர்த்தருக்கு நாம் என்னத்தைச் செலுத்துவோம்?

*நமது நன்றி நிறைந்த உணர்வானது, நம்மை “கர்த்தர் [நமக்குச்] செய்த எல்லா உபகாரங்களுக்காகவும், அவருக்கு என்னத்தைச் செலுத்துவோம்?” என்று கேட்கத் தூண்ட வேண்டும். கர்த்தருடைய பெருந்தன்மைக்கு நாம் எவ்விதத்தில் பதில்செயல் செய்ய வேண்டும்? இதைக் கற்பனை செய்து பாருங்கள்: யாரோ ஒருவர் எனக்கு ஒரு அழகிய இல்லம், ஒரு புதிய வாகனம், மற்றும் வங்கியில் ஏராளமான பணம் ஆகியவற்றைக் கொடுக்கிறார். பிறகு, ஒருநாளில், பெருந்தன்மையான இம்மனிதர் என்னிடம் வந்து, எனது இல்லத்தில் அவர் ஒரு இரவு தங்கி இருந்து, அடுத்த நாள் காலையில் அவரை நான் விமான நிலையத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றார். நான் அதற்கு, “இல்லை! நீங்கள் கேட்பது மிகவும் அதிகம்! இது எனது மனைவிக்கும் எனக்கும் மிகவும் பரிதாபமான நிலையை ஏற்படுத்தும். எனக்கு நேரம் இல்லை. அத்துடன், விமான நிலையத்தில் வாகனத்தை நிறுத்தும் இடத்தில் எனக்கு ஏராளமான பணம் செலவாகும்!” என்று பதில் அளிக்கின்றேன். குறைந்தபட்சமாகக் கூறுவதென்றால், இப்படிப்பட்ட ஒரு பதிலானது என்னை முற்றிலும் நன்றி யற்றவனாக அடையாளப்படுத்தும். கர்த்தர் நம்மை ஏராளமாய் ஆசீர்வதித் திருக்க, நாம் அவருக்கு நேர்மறையாக பதில் அளிக்கா விட்டால் நாம் இதை விடப் பெரிய அளவில் நன்றியற்றவர்களாய் இருக்கிறோமல்லவா?*

### *நமது அன்பு*

*நாம் கர்த்தருக்கு நமது அன்பைச் செலுத்துவது அவசியமாய் உள்ளது. நமது பாடத்திற்கான வேத வசனப் பகுதி சங். 116ல் காணப்படுகின்றது. அந்த சங்கீதம் பின்வரும் வார்த்தைகளுடன் தொடங்குகின்றது: “கர்த்தர் என் சத்தத்தையும் என் விண்ணப்பத்தையும் கேட்டதினால், அவரில் அன்புகூருகிறேன்” (வ. 1). இதைப் புதிய ஏற்பாடு பின்வருமாறு*

உரைக்கின்றது: "அவர் முந்தி நம்மிடத்தில் அன்புகூர்ந்தபடியால் நாமும் அவரிடத்தில் அன்புகூருகிறோம்" (1 யோவா. 4:19).

அன்பு என்பது நேர்மறையான மற்ற பதில்செயல்களை உண்டாக்கும் என்ற காரணத்தினால், நமது பட்டியலில் அன்பு முதலாவதாக உள்ளது. ஒரு மனிதர் மற்றும் அவருடைய மனைவி, ஒருவர் மற்றொருவரை அன்புசெய்கின்ற பொழுது, "திருமணச் சட்டங்களில்" பெரும்பாலானவை தங்களையே பராமரித்துக் கொள்கின்றன. நாம் தேவன்மீது உண்மையாய் அன்புகூருகின்ற பொழுது, அவரைப் பிரியப்படுத்துவதற்காக எதையும் மற்றும் எல்லாவற்றையும் நாம் செய்வோம்.

## நமது நன்றி செலுத்துதல்

நாம் நமது நன்றி செலுத்துதலைத் தேவனுக்குச் செலுத்த வேண்டியது அவசியமாகும். "கர்த்தர் எனக்குச் செய்த எல்லா உபகாரங்களுக்காகவும், அவருக்கு என்னத்தைச் செலுத்துவேன்" (சங். 116:12) என்று கேட்டு சில வசனங்களுக்குப் பிறகு சங்கீதக்காரர், "நான் உமக்கு ஸ்தோத்திர பலியைச் செலுத்தி, கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுவேன்" (வ. 17) என்று பதில் அளித்தார். புதிய ஏற்பாட்டில் பவுல், "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதுமே எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரித்து" (எபே. 5:20) என்று எழுதினார்.

நன்றி செலுத்துவதற்கு நாம் அடிக்கடி தவறி விடுகின்றோம். இரண்டாம் உலகப் போரின் போது, படைத் தலைவராய் இருந்த ஜார்ஜ் பேட்டன் என்பவர் ஒரு படை வீரரை அமெரிக்காவின் மூன்றாம் படையிலிருந்து ஓய்வு முகாமிற்கு அனுப்பி வைத்தார். அந்தப் படை வீரர் அவருக்கு நன்றியின் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்தார். தளபதியான பேட்டன், தாம் முப்பத்தி ஐந்து ஆண்டுகள் அளவாகப் படையில் பணியாற்றியிருந்ததாகவும், தாம் பெற்றுக் கொண்ட முதலாவது நன்றிக் குறிப்பு இதுதான் என்றும் கூறினார். பென்ஞமின் பிராங்ளின், "வீணான வார்த்தை ஒவ்வொன்றிற்கும் நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டியுள்ளது போலவே, வீணான அமைதி ஒவ்வொன்றிற்கும் நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும்" என்று கூறினார்.

## நமது காலம்

நமது அன்பையும், நன்றி செலுத்துதலையும் நாம் எவ்வாறு வெளிப் படுத்துவோம்? நாம் நமது பாடத்தை இயன்ற அளவுக்கு நடைமுறைக் குரியதாக்குவோம். நமது காலத்தை நாம் தேவனுக்குச் செலுத்த வேண்டும். பவுல் பின்வரும் அறைகூவலைக் கொடுத்தார்: "ஆனபடியினாலே, நீங்கள் ஞானமற்றவர்களைப்போல நடவாமல், ஞானமுள்ளவர்களைப்போலக் கவனமாய் நடந்து கொள்ளப்பார்த்து, நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள்" (எபே. 5:15, 16). சிலர், "எனது வாழ்வு எவ்வளவு அவசர கதியில் உள்ளது என்பது உங்களுக்குத் தெரியாது. கர்த்தருக்கு ஒப்புக் கொடுக்க எனக்கு நேரமே கிடையாது" என்று மறுக்கலாம். ஒருவேளை, ஒரு மருத்துவர் உங்களிடம் நீங்கள் ஒவ்வொரு

*நாளும் ஒரு மணி நேரம் கூடுதலாக உங்கள் படுக்கையில் ஓய்வெடுக்க வேண்டும், இல்லையென்றால் நீங்கள் இறந்து விடுவீர்கள் என்று கூறினார் என்பதாக வைத்துக் கொள்வோம். ஒருவேளை, ஒரு மருத்துவர் உங்களிடம், ஒவ்வொரு நாளும் முப்பது நிமிடங்கள் வாசிப்பதினால் உங்கள் கண்களுக்குப் பயிற்சி கொடுக்க வேண்டும், இல்லையென்றால் நீங்கள் பார்வையற்றவராகி விடுவீர்கள் என்று கூறினார் என்பதாக வைத்துக் கொள்வோம். ஒருவேளை, ஒரு ஆசிரியர் உங்களிடம், உங்கள் பிள்ளையின் பாடத்தில் நீங்கள் ஒரு நாளைக்கு ஒரு மணி நேரம் வீதம் உதவி செய்ய வேண்டும், இல்லையென்றால் அவன் தவறி விடுவான் என்று கூறியுள்ளார் என்பதாக வைத்துக் கொள்வோம். உங்களுக்கு நேரம் கிடைக்குமா? நீங்கள் காலத்தை ஏற்படுத்துவீர்களா? நாம் எஜமானருக்காக - காலத்தைக் காண்போம் - அல்லது காலத்தை ஏற்படுத்துவோம்.*

## *நமது திறமைகள்*

*தேவன் நமக்களித்துள்ள திறமைகளை நாம் அவருக்குச் செலுத்துவோம். மத். 25:14-30ல் உள்ள தாலந்துகளின் உவமையானது, நம் யாவருக்கும் தேவனால் தரப்பட்ட திறமைகள் உள்ளன மற்றும் அவற்றை நாம் அவருடைய மகிமைக்காகப் பயன்படுத்த வேண்டும் என்று போதிக்கின்றது. அந்த உவமையில், ஒரு தாலந்தைப் பெற்ற மனிதன் தனது தாலந்தைப் புதைத்து விட்டான். நாம் சுயநலம், மாறுபட்ட தன்மை, வெதுவெதுப்பான நிலை, பொருளாதாயப் பண்பு அல்லது தேவ பக்தியின்மை என்ற கல்லறையில் நமது திறமைகளைப் புதைத்து வைத்து, அதினால் குற்றவாளிகளாகி விடாதிருப்போம்.*

## *நமது பணம்*

*நாம் நமது பொருளுடைமைகளையும் அவருக்குச் செலுத்த வேண்டும். அப். 2ல், ஆதி கிறிஸ்தவர்கள் மகிழ்வுடன் இருந்தார்கள் என்று சித்தரிக்கப் பட்டார்கள்: "அவர்கள் ... மகிழ்ச்சியோடும் கபடமில்லாத இருதயத்தோடும் போஜனம் பண்ணி ..." (அப். 2:46). அவர்கள் தங்கள் ஆசீர்வாதங்களை உணர்ந்தவர்களாய், தங்கள் பொருளுடைமைகளை "ஒவ்வொரு வனுக்கும் தேவையானதற்குத் தக்கதாக அவைகளில் எல்லாருக்கும்" (வ. 45) பகிர்ந்து கொடுக்க அவர்கள் தயங்கவில்லை. 2 கொரிந்தியர் 8ம் அதிகாரத்தின்படி, மெக்கதோனியாவில் இருந்த கிறிஸ்தவர்கள் "தங்கள் பரிபூரண சந்தோஷத்தினாலே மிகுந்த உதாரத்துவமாய்க் கொடுத்தார்கள்" (வ. 2). தேவனுடைய ஊழியத்தினிமித்தம் நமது பொருள் ஆசீர்வாதங்களைப் பயன்படுத்தும்படி நமது அன்பு நம்மைத் தூண்டவில்லையென்றால், அந்த அன்பு வெறுமையானதாகவே இருக்கின்றது.*

## *நமக்குள்ள யாவையும்*

*இன்னும் அதிகமாய்ச் சொல்லப்பட முடியும். நாம் நமக்குள்ள "எல்லாவற்றையும்" (மத். 22:37ஐக் காணவும்) கர்த்தருக்குச் செலுத்த வேண்டும் என்று கூறுவதினால் நாம் மேற்கொள்ள வேண்டிய*

*பதில்செயலை நான் தொகுத்துரைக்கின்றேன். நமது வேத பாடப் பகுதிக்கு நாம் கடைசியாக ஒருமுறை திரும்புவோம். "கர்த்தருக்கு நான் என்னத்தைச் செலுத்துவேன்" என்று கேட்ட பிறகு, எழுத்தாளர், "நான் கர்த்தருக்குச் செய்த பொருத்தனைகளை ... செலுத்துவேன் (சங். 116:4; வ. 18ஐயும் காணவும்) என்று கூறினார். வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், "நான் கர்த்தருக்கு வாக்களித்த ஒவ்வொன்றையும் செய்வேன்" என்றே அவர் கூறினார்.*

*நீங்களும் நானும் கிறிஸ்தவர்களான பொழுது, நாம் இயேசுவைக் கர்த்தர் என்று அறிக்கையிட்டோம் (அப். 8:36-38; ரோமர் 10:9, 10). அந்த அறிக்கையிலும் மற்றும் அதைத் தொடர்ந்த ஞானஸ்நானத்திலும், நாம் நமது வாழ்வைக் கர்த்தருக்கு ஒப்புவித்தோம். இதன் செயல்விளைவாக, நாம் அவருடைய சித்தத்தை எப்பொழுதும் செய்வதாகப் பொருத்தனை செய்தோம்.*

## *முடிவுரை*

*ஃபிரான்செஸ் சி. ஹெவர்கால் என்பவர் பின்வருமாறு எழுதினார்:*

*என்தன் ஜீவன், இயேசுவே,*
*சொந்தமாக ஆளுமே;*

*திருப்பாதம் பற்றினேன்;*
*என்தன் நேசம் ஊற்றினேன்;*
*என்னையே சமூலமாய்*
*தத்தம் செய்தேன் நித்தமாய்.*[4]

*தேவன் நமக்களித்துள்ள உபகாரங்கள் மிகச் சிறந்தவைகளாகும்.நமது சிறந்தவற்றை நாம் இப்பொழுது அவருக்குச் செலுத்துவோம்.*

---

*குறிப்புகள்*

[1]*நோவாவின் நாட்களில் பேழைக்குள் இருந்தவர்கள் உயிர் பிழைத்தார்கள், பேழைக்கு வெளியே இருந்தவர்கள் உயிர் பிழைக்கவில்லை.* [2]*வாக்களிக்கப்பட்ட நாட்டில் தேவன் அடைக்கல நகர்களை அளித்திருந்தார், மனிதர்கள் தங்களின் பாதுகாப்பிற்காக இந்த நகர்களுக்குத் தப்பியோட முடியும் (எண். 35).* [3]*வாழ்க்கைத் தேவைகளுக்குக் கர்த்தருடைய அளிப்பு பற்றி உபா. 8:18 மற்றும் சங். 37:25 ஆகிய வசனங்களிலும் காணவும்.* [4]Frances R. Havergal, "Take My Life, and Let It Be," *Songs of Faith and Praise*, Comp. and ed. Alton H. Howard (West Monroe, La.: Howard Publishing Co., 1996). [5]*இந்தப் பாடத்தைத் தயாரிப்பதில் நான்* Wendell Winkler *அவர்களின்,* "What Shall I Render Unto the Lord for All His Benefits Toward Me?" *Giving With a Purpose, a Promise, and a Performance* (Fort Worth, Tex.: Winkler Publications, 1966), 165-89 *என்ற நூலில் இருந்து அதிகமாய் எடுத்தாளுகை செய்தேன்.*